OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 01 ஞாயிற்றுக்கிழமை (13 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 78

## சமாதானப் பேச்சுக்கான

# புலிகளின் நிலைப்பாடு ஜனாதிபதியிடம்; பரிசீலனை செய்வதாக அவர் வாக்குறுதி

## சர்வோதய ஆரியரத்னா தகவல்

கொழும்பு, பெப்ரவரி 13

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, சமாதானப் பேச்சுக்களை நடத்துவது சம்பந்தமான தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை –

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னா, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அக்கறையுடன் பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி தம்மிடம் வாக்குறுதியளித்ததாக கலாநிதி ஆரியரத்னா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமது பாரியாருடன் கலாநிதி ஆரியரத்னா யாழ்ப்பாணம் சென்றிருந்தார். அப்போது அவர் விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார்.

விடுதலைப் புலிகள் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலனுடன் நடத்திய பேச்சுக்களின் விவரத்தை சர்வோதயத் தலைவர் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு நேரில் தெரிவித்தார்.

திரு. கரிகாலனுடன் தாம் நடத்திய பேச்சை ஒலிப்பதிவு செய்து கொண்டு வந்து ஜனாதிபதிக்குப் போட்டுக் காண்பித்தார்.

இது சம்பந்தமாக ஆரியரத்னா பி. பி. ஸிக்கு பேட்டி ஒன்றை வழங்கினார். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் உங்களிடம் என்ன கூறினார்கள்?

பதில்: அவர்கள் அடிப்படையில் கூறியது இதுவாகும்: நிரந்தர சமாதானத்துக்கு நாம் தயாராய் இருக்கிறோம். அதற்கான சூழ்நிலைகளை அரசாங்கம் உருவாக்க வேண்டும். தாம் யுத்தத்தை விரும்பவில்லை எனவும் யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதை விரும்பவில்லை எனவும் அவர்கள் கூறினார்கள்.

கேள்வி:- குறைந்தபட்சம் என்ன நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறினார்களா?

பதில்: நான் அந்த விவரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 13

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் பொன்னாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல் பனைமரங்களில் விழுந்து வெடித்ததால் பல மரங்கள் முறிந்து நாசமாகின.

மக்கள் பீதியினால் மூளாய்ப் பகுதிக்கு – இடம் மாறி இரவைக்கழித்தனர்.

## பிரேமா கொலையுண்ட போது

# வெடி கொளுத்திய இருவர் ஐ. தே. க. வேட்பாளர்கள்!

கொழும்பு, பெப். 13

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்ட சமயம் வெடி கொளுத்தி தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடிய இருவர் நடைபெறவுள்ள தென்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசவின் சொந்தக் கிராமப் பகுதியான வலப்பிட்டி பிரதேசத்துக்கே மேற்படி இருவரும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசின் இந்த நடவடிக்கை வலப்பிட்டிப் பகுதியில் உள்ள பிரேமதாசாவின் உறவினர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-5-6)

# புலிகள் தேர்தலில் பங்கு கொள்ள உற்சாகம் அளிக்கப்படும்!

## ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, பெப். 13

வடபகுதி தீவிரவாதிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டு வரவும் –

அவர்களை தேர்தலில் பங்கு கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கு உற்சாகம் அளிக்கவும் – தாம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் புதிய தபால் நிலையக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் சுபாதிபத்தியம் பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதற்காக அரசாங்கம் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவை செலவிடுகிறது. இந்த பாதுகாப்புச் செலவு நாட்டுக்குப் பெரும் சுமை ஆகும்.

நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஐக்கிய இலங்கையை ஆட்சி செலுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அங்கு சொன்னார். (இ-9)

## படகுகள் மோதி ஒருவர் காயம்

ஹெலிக்கொப்டர் வட்டமிடவே வேகமாக வந்த இரு படகுகள் மோதுண்ட சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு கிளாலிக் கடலில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் சிவசம்பு சிவகுமார் (வயது 35) என்பவர் காயம் அடைந்து பலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-117)

# முன்னாள் அமைச்சர் வீட்டில் புதிதாக பொலீஸ் நிலையம்

மட்டக்களப்பு – செங்கலடியில் உள்ள முன்னாள் உள்நாட்டு அமைச்சர் திரு தேவநாயகத்தின் இல்லத்தில் புதிதாக ஒரு பொலீஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே அங்கு புதிதாகப் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# கடற்படை ரோந்தில் மேலும் நான்கு அதிவேக படகுகள்

இலங்கை கடற்படையின் கரையோர பாதுகாவல் கண்காணிப்புச் சேவையில் மேலும் நான்கு அதிவேக ரோந்துப் படகுகள் சேரவிருக்கின்றன.

இவற்றில் இரண்டை கொழும்பு டொக்யாட் நிறுவனம் 85 கோடி ரூபா செலவில் அமைக்க இருக்கின்றது.

முதலாவது அதிவேகப் படகை பிரான்ஸைச் சேர்ந்த சிமோனி மெரயென் இன்ரநெஷனல் நிறுவனம் கொழும்பு டொக்யாட்டுக்கு என அமைத்து வழங்கியுள்ளது. கொழும்பு டொக்யாட்டைச் சேர்ந்த 20 அதிகாரிகள் தற்போது பிரான்ஸில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட ரோந்துப் படகை கொழும்பு டொக்யாட் நிறுவனத்தின் தலைவர் சிரோன் பீரிஸ் இலங்கை கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் டி. ஏ. எம் ஆர். சமரசேகரவிடம் சமீபத்தில் ஒப்படைத்தார். (இ-162)

## தென்னிலங்கை செல்ல உள்ள

# இந்துமதக் குருமார் குழு புலிகளுடன் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

தென்னிலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்துமத குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த குருமார்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று சந்தித்தனர்.

நேற்று மாலை 5.30 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து இந்துமதக் குருமார்களுக்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளால் தெளிவுபடுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்துமத குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த குருமார்கள் குழு விரைவில் தென்னிலங்கை சென்று தமிழ் மக்களின் நிலை பற்றி தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறவுள்ளது. [இ-5]

# மார்ச்சில் பௌத்த குருமார்களை அழைத்துவர ஆயர் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 13

தென்னிலங்கையிலிருந்து உயர் மட்ட பௌத்த குருமார்கள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வர உள்ளதாக அறியவருகிறது.

மார்ச் மாதம் முதல் வாரத்தில் இந்த குழு இங்கு வர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை தற்போது யாழ் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ மேற்கொண்டு வருகிறார்.

இம்மாதம் நடுப்பகுதியில் கொழும்பு திரும்பிச் செல்ல உள்ள அங்கிலிக்கன் ஆயர் மீண்டும் மார்ச் மாத முற்பகுதியில் பௌத்த குருமார்களுடன் இங்கு வருவார் என்றும் –

இது ஒரு நல்லெண்ண விஜயமாகவே அமையும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-5-9)

## நிலாவரையில் ஹெலி தாக்கு

புத்தூர், நிலாவரைப் பகுதியில் நேற்று வீதியால் சென்ற வாகனங்கள், மற்றும் பொது மக்களை குறிவைத்து ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது.

எனினும் எவரும் காயம் அடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-11)

## முச்சந்தி முரளி



அங்கால புதிசு புதிசா வாங்கி இங்கால கொடுக்கப் போகினம் பாருங்கோ .....!

# வட மத்திய மாகாணத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு

கொழும்பு, பெப். 13

வடமத்திய மாகாணத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 750 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. வீதிகள் எங்கும் வெள்ளம் பெருகிப் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பெருமளவு வயல்நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குளங்கள் பலவும் நிரம்பி வருகின்றன.

பொலன்னறுவை மாவட்டத்திலும் தொடரும் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மூன்றாவது வெள்ளப் பெருக்கு இதுவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-5)

# வவுனியா நகரில் வாழும் தமிழர் மீது கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 13

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் மீது பொலீஸார் பல கட்டுப்பாடுகளைப் புதிதாக விதித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர, தற்காலிக அனுமதிப் பத்திரம் பெற்று அங்கு வசிக்கும் தமிழர்கள் கிராம சேவையாளர்களின் சிபார்சுடன் மீண்டும் பொலீஸில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் — இந்த நடைமுறை உடன் அமுலுக்கு வருவதாகவும் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பதிவு செய்து கொள்வதற்கான பத்திரங்கள் கிராம சேவையாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## நேற்றும் நால்வர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 13

செப்ரிசீமியா, மலேரியா, ஈரல் அழற்சி நோய்களினால் நேற்றும் நால்வர் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமாகினர்.

சதுமலை தெற்கைச் சேர்ந்த பசுபதி விமலகாந்தன் (வயது 9), பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த மார்க்கண்டுதாஸன் சாளினி (வயது 3), ஆகிய இருவரும் செப்ரிசீமியாவினாலும் — கெற்பலியைச் சேர்ந்த இராசையா நிர்மலா (வயது 23) மலேரியாவினாலும் — (நாகர் மாணிக்கம் (வயது 67) ஈரல் அழற்சி நோயினாலும் மரணமாகினர் (நாகர் மாணிக்கம் வயிற்றோட்டத்தால் பீடிக்கப்பட்டே வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# கனடாவில் தமிழர் நடத்தும் போலி கடவுச்சீட்டு நிலையம்

கொழும்பு, பெப். 12

கனடா — ஒன்ராறியோ மாநிலத்தில் அகதியாகவுள்ள இலங்கைத் தமிழர்கள் சிலர் போலிக் கடவுச்சீட்டுக்களைத் தயாரிக்கும் பதினைந்து நிலையங்களை நடத்தி வருகின்றனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்விவரம் அகதியாக கனடாவில் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட லோகநாதன் சபாநாதன் என்பவர் மீது அங்குள்ள நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் விசாரணையின் போது வெளியானதாக அறிவிக்கப்படுகிறது.

போலிக் கடவுச்சீட்டை தயாரித்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. [இ-எ-6]

# விஜேக்கு பதிலாக வேறொருவரை தேர்தலில் நிறுத்துவதற்கு முயற்சி

## ஐ. தே. கவுக்குள் பிளவு என்கிறார் 'ராவய' ஆசிரியர்

கொழும்பு, பெப். 13

ஜனாதிபதி விஜேதுங்காவை கட்சிக்குள் இருந்து தூக்கி வீசுவதற்கான நடவடிக்கைகள் ஐ தே கவுக்குள் ஆரம்பமாகியுள்ளன.

விஜேதுங்காவை பெயரளவிலான தலைவராகக் கொண்டு தேர்தலின் போது அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை வேட்பாளராக நிறுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்வாறு [illegible] உளவுச் சேவையின் அறிக்கைகள் எச்சரித்துள்ளதாக 'ராவய' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை அடுத்தே திரு. காமினி திஸநாயக்காவையும், திரு றொனி டிமெல்லையும் விஜேதுங்கா அவசர நடவடிக்கையாக கட்சிக்குள் மீண்டும் இணைத்துக் கொண்டார் என்றும் — [illegible] வெளிப்படையாக வெளியில் இருந்து அவர்கள் இருவரையும் கட்சிக்குள் இணைத்துக் கொள்வதில் ஜனாதிபதி வெற்றி பெற்றாலும் அவர்கள் இருவருக்கும் புதிய பதவிகளை வழங்க அவரால் முடியாதுள்ளது.

எதிரிகளைக் கட்சிக்குள் அனுமதித்தமை குறித்து பிரதமர் ரணிலும், சிறிசேன கூரேயும் ஆத்திரமுற்றுள்ளனர்.

அதேபோன்று ஐ தே. கட்சிக்குள் இணைந்து கொண்ட தமக்குரிய பதவிகளை வழங்க ஜனாதிபதி இதுவரை முயற்சி எடுக்காமல் இருப்பது குறித்து காமினி திசநாயக்காவும், றொனி டிமெலும் விசனமுற்றுள்ளனர்.

இந்நிலையில் —

அரசுக்குள் நிலவும் பூசல்கள் நடைபெறவிருக்கும் தென் மாகாண சபைத் தேர்தலை எவ்வாறு பாதிக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை

— இவ்வாறு திரு. விக்டர் ஐவன் ''சந்தேசய'' வுக்குத் தெரிவித்தார். (இ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமைப்புரட்சி தமிழீழத்தின் எழுச்சி

எங்கள் தாயகத்தை
பச்சை நிறமாக்கி - பட்டினியிலிருந்து
பாதுகாக்கும் விவசாயிகளே!
நாங்கள் போர்க்கோலம் பூண்டதுபோல்
மக்கள் ஏர்க்கோலம்-
பூண்டாக வேண்டிய - புதுப்பணி
காத்துக் கிடக்கின்றது!
உறுதியுடன் நின்று
உற்பத்தியைப் பெருக்குவோம் - இன்று

நெல் அறுவடை முடிந்து - நிலம்
உங்களுக்காகக் -
காத்துக் கிடக்கின்றது
வயலை உழுது - பயறு, உழுந்து
கௌபி, எள், நிலக்கடலை - போன்ற
உபஉணவுத் தானியங்களை-
உற்பத்தியாக்குவோம்!
ஒரு அங்குல நிலத்தையும் - தரிசாக விடாது
தானியக் களஞ்சியமாக்குவோம்.

## உங்களுக்கான சகல விதைகளையும், உடனடியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத் தொடர்பகங்களின்

# பசுமை | விவசாயசேவை

## நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### அமைவிடங்கள்:

1. **கோப்பாய்** - நீர்வேலி சந்தி, நீர்வேலி
2. **சண்டிலிப்பாய்** - கட்டுடைச்சந்தி, சண்டிலிப்பாய்
3. **உடுவில்** - மானிப்பாய் வீதி, உடுவில்
4. **நல்லூர்** - முடமாவடி, நல்லூர்
5. **கோண்டாவில்** - இருபாலை வீதி, கோண்டாவில்
6. **சங்கானை** - பிரதான வீதி, சங்கானை
7. **கரவெட்டி** - பருத்தித்துறை வீதி, நெல்லியடி
8. **பருத்தித்துறை** - மந்திகைச் சந்தி
9. **கைதடி** - கண்டி வீதி, கைதடி
10. **சாவகச்சேரி** - கண்டி வீதி, சாவகச்சேரி
11. **கொடிகாமம்** - கச்சாய் வீதி, கொடிகாமம்
12. **பளை** - கண்டி வீதி, பளை

* வி சாயத் தேவைக்குரிய உள்ளீடுகளான உரம், கிரிமிநாசனி, விவசாய உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்க 'பசுமை விவசாயசேவை' காத்திருக்கின்றது.

(விளம்பர இலக்கம்: இ-7327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்

# நாற்பதாண்டு மலர் வெளியீடு - சேவை நலம் பாராட்டு

## நிகழ்வுகளையொட்டிய சிறப்பிதழ் (13-02-1994)

## UNTIRING EFFORTS

During my time in Sri Lanka (1984-90) the United Nations Development Programme sought to balance its main technical assistance to the country's institutions engaged in various fields of economic and social development with support to the efforts of community - based groups for the well-being and individual advancement of their less well-off members. Most notable among these groups was the Mallakam Rural Development Society with its multifarious efforts for the health, education, well-being and advancement of the people of Mallakam, and of Valikamam North in general. The circumstances which prevailed at that time made these efforts more difficult and all the more meritorious. I should like to pay tribute to the leadership, dynamism, and untiring efforts of Mr. S. Sribaskaran, the President of the Mallakam Rural Development Society, to which so much of the Society's success is due. His constant correspondence brought to UNDP's attention many worthy activities and projects for which we were able to secure funding, from our own and other sources, and the various facilities built as a result remain as monuments to his achievements on behalf of his people. I should also like to record my deep appreciation for his hospitality and guidance when I had the opportunity of visiting the Jaffna area in December 1989, which made that visit so interesting and encouraging.

I should like to convey my warmest best wishes to the Mallakam Rural Development Society on its Ruby Jubilee and to Mr. S. Sribaskaran on his personal Diamond Jubilee; may their efforts for the benefit of their fellow people continue fruitful and unabated.

Cooks Islands
Western Samoa

Matthew Kahane
Resident Representative
UNDP

## CONGRATULATIONS

I am writing on behalf of Lady Daphne Straight who has sadly retired from working with us here at RLS. We would like to congratulate the Mallakam Rural Development Society for all the good work it has done in the development field and for our longstanding co-operation. By acting as a distributor you have made it possible for RLS to supply the North of Sri Lanka with books. In particular we would like to congratulate Mr. Sribaskaran on the occasion of his Diamond Jubilee, and the Mallakam Rural Development Society on the Occasion of its Ruby Jubilee.

Ranfurly Library Service
London

Sara Harrity
Director


### பாராட்டி வாழ்த்துவோர்

**அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்**
மருதனார்மடம், இணுவில்.

**தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்**
மானிப்பாய்.

**சுன்னாகம் பனை, தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கம்**
சுன்னாகம்.

**நிருசன் ரெக்ஸ்**
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**ரட்ணம் ஸ்ரோர்ஸ் பலசரக்கு வியாபாரம்**
மல்லாகம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

**அக்றோ இன்டஸ்றியல்**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

**தாமோதரி இரும்புத் தொழிலகம்**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

**அண்ணா கோப்பி**
இணுவில்.

**ஏ. எஸ். ஜே. பிறின்ரிங் வேக்ஸ்**
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.

**ஈஸ்வரி இருப்பகம்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

**விஷ்ணுகரன் பான்சி ரெக்ஸ்**
இல 20, Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**பவானி ரேட்ஸ்**
இல. 16, Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**மானிப்பாய் பனை, தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கம்,**
மானிப்பாய்.


## ஆர்வத்தோடு நற்தொண்டு புரிந்தவர்கள்

நாற்பதாண்டு மகத்தான சேவை நிறைவையொட்டி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் சிறப்பு மலரொன்றை நாட்டிற்குத் தந்துதவுகிறது. இதன் போஷகரான சைவப்பெரியார் நம சிவப்பிரகாசம் அவர்களையும் தலைவரான சமூகஜோதி சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களையும் இவர்கள் இச்சங்கத்தின் மேன்மைக்கும், மக்களின் முழுமையான வாழ்க்கைச் சிறப்பிற்கும் அயராது காலதேச வர்த்தமானங்களுக்கமைய ஆற்றிய சேவைகளை நினைந்து மக்கள் வாழ்த்துகிறார்கள். மனுஷனுக்கு அவசியம் வேண்டப்படுவன என்ன, எத்தகையதாக வேண்டும் என்பனவற்றை நன்கு ஆராய்ந்து, அதன்வழி திட்டங்களை வகுத்து, உருவகப்படுத்தி, அதன் வழி கிராம அபிவிருத்தியை நடத்தியவர்கள். சைவப் பெருமக்களான இவர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுதவர்களது இருக்கண்களைப் போக்கி அவர்கள் வாழ வழியமைத்துக் கொடுத்த வரலாறுகளோ ஏராளம். இவர்கள் தம் நற்தொண்டுகளில் ஆர்வத்தோடு செயற்பட்டதனால்தான் இன்றும் நாட்டு மக்கள் இவர்களைப் போற்றி, வாழ்த்தி, தத்தம் நன்மதிப்பிற்குரிய தலைவர்களாகக் கருதுகின்றனர். இதனால் நாடு போற்றும் உத்தமர்களாயினர்.

இப் பெரியார்கள் நீடூழி வாழ்ந்து, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தையும் வளர்த்து, மக்கள் அனைவரும் நற்பேறுகள் பெற மாவைக் கந்தன் இவர்கட்கு சகல திருவருட் செல்வங்களையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்,
மாவைஆதீனகர்த்தா பிரதமகுரு
மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம்.

## விறல் மிக்க தலைவர் ஸ்ரீபாஸ்கரன்

எங்களதும் இம்மாநிலத்தவர்களதும் பெருமதிப்புக்குரியவர் மணிவிழாக்காணும் மகிமை பொலியும் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்கள், மகாஜனா, யூனியன் கல்லூரிகளிலே ஆசிரியராக அவர்கள் கடமை புரிந்த வகையில் மட்டுமல்ல துர்க்கா தேவஸ்தானத்திலே சண்டேசுரப் பெருமானுக்குக் கோயில் அமைந்த வகையிலும் ஆசிரியையாக அவர்கள் மனைவியார் துர்க்காபுரத் தொண்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நெறியிலும் திரு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களை நாங்கள் நன்கறிவோம். அவர்கள் தந்தையார் இந்நாட்டில் பெரும்புகழ் படைத்த திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலைத் தலைவராக இருந்து கல்விக்கோட்டத்திலே செல்வாக்கு மிக்கவர். மாமனார் வித்தியாதிகாரியாக விளங்கிய திரு. அ. சரவணமுத்து அவர்கள் ஆலாலசுந்தரர் குருபூசை நாளாகிய ஆடிச் சுவாதியிற் பிறந்த பெருமையைத் துர்க்கை கோயில் ஆண்டுதோறும் அன்னதான உபயம் செய்து நினைவுகொள்ள விசேட பூசை நிகழ்த்துவித்தவர். திரு. பாஸ்கரனின் துணைவியார் திருமதி பாலாம்பிகை அவர்கள் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் துணைத் தலைவியாக இருந்து நற்பணியாற்றுபவர். நலம்பல புரிந்து எம்மை ஊக்குவிப்பவர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் நிறுவப் பெற்று நாற்பதாண்டுகள் ஆகும் நல்ல மையத்திலே அதன் விறல்மிக்க தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் மணிவிழாப் பேறடைதல் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். இக்குடாநாட்டிலே உன்னதமாக விளங்கும் மல்லாகம் அபிவிருத்திச் சங்கம் துர்க்காதேவிப் பெருந்திருவிழாக் காலங்களிலே பலவகையிற் பணியாற்றி தெரு வீதியிலே விசேட மின்ஒளி வசதியும் செய்து வருவதை துர்க்கையை வழிபடுவோர் மகிழ்ச்சியுடன் அனுபவித்து வந்தனர்.

கல்விமான்கள் குடும்பத்திலே விளங்கும் கல்விமான், பரோபகாரிகள் மத்தியிற் பணியாற்றியும் பரோபகாரி, ஊராருக்குப் பேராதரவு புரியும் தருமசீலன். இவர்களின் மணிவிழா மகத்துவமானது; மகிழ்ச்சிக்குரியது.

துர்க்காதேவியின் பேருளால் மணிவிழாத் தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களும் துணைவியாரும் பல்லாண்டு வாழ்க வெனப் பாராட்டி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் தொடர்ந்தும் தூய தொண்டு புரியத் திருவருள் பாலிக்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி,
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

## தரிசனம் நிறை பார்வை மிக்கவர்

திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் 1978இல் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகி இன்றுவரை அப்பதவியில் இருக்கின்றார். அவருடைய தலைமையில் இச்சங்கம் பெற்றுள்ள வளர்ச்சியை நான் பலதடவை கண்ணாரக் கண்டுள்ளேன். சமூதாயத்தினதும் மக்களினதும் உயர்ச்சிக்காக அவர் ஆற்றிவரும் பணிகளை நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். சகல அபிவிருத்தி முயற்சிகளும் மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டு மக்களில் முடிவடைகின்றன. இந்த விஷயத்தில் திரு. ஸ்ரீபாஸ்கரன் எப்பொழுதும் ஒரு தரிசனப் பார்வையுடன் பணியாற்றி வந்துள்ளார். மக்கள்தான் தேசத்தின் அத்திவாரம் என்று அவர் என்னிடம் எப்பொழுதும் கூறுவார். அத்திவாரம் உறுதியாக இருந்தால் அமைதி இருக்கும். இந்த சிந்தனைக்கு ஏற்ப அவர் புத்தம்புதிய, உணர்ச்சிகரமான, ஊக்கந்தரும் எண்ணங்களை உருவாக்கியுள்ளார்.

அவருடைய களையாத முயற்சிகளால் சங்கம் உலகின் சகல பாகங்களில் இருந்தும் தாராளமான உதவிகளை பெற்றுள்ளது. அவர் மிகுந்த கவனத்துடன் சகல திட்டங்களையும் திட்டமிட்டுச் செயற்படுத்தியுள்ளார். சுகாதாரம், வேலை வாய்ப்பு, ஊக்குவிப்பு, கல்வித் திட்டங்கள் உட்படப் பல திட்டங்களை இச்சங்கம் வெற்றிகரமாக அமுலாக்கியுள்ளது. இது தவிர, அவர் மல்லாகத்தில் பல ஸ்தாபனங்களின் தலைவராக இருக்கின்றார். மக்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. அவர் ஒரு தனித்துவமான மனிதர்; திறமை மிக்க மனிதர்.

எதிர்வரும் தசாப்தங்களில் இந்தக் குணவியல்பு மக்கள் மனங்களில் மங்காது நிற்கும் என்று நம்புகிறேன்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர்.
செயலகம்,
யாழ்ப்பாணம்.

## மேன்மேலும் வெற்றி கிடைக்குக!

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நாற்பதாண்டு விழா, அதன் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் வைர விழா ஆகியவற்றை ஒட்டி இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏழைகளும்பட்டினி கிடக்கும் மக்களும்வருவாய் பெறுவதற்கு வாய்ப்புகள் உருவாகஎமது பின்தங்கிய கிராமங்களில் பொருத்தமான சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்த மக்கள் சுய-சார்பானவர்களாகுவர்; சமுதாயத்துக்கு சுமையாக இருக்கமாட்டார்கள். வேலையற்றவர்களுக்கு வேலை வழங்க கிராமங்களில் உள்ள வளங்கள் இனங்காணப்பட்டு வருவாய் - உருவாக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அடிமட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இதைச் செய்யக்கூடியனவாக விளங்குகின்றன.

மக்களின் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சியை அபிவிருத்தி செய்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளில் அது பல சமூக அபிவிருத்தி, சுகாதார, நிவாரண, வறுமை ஒழிப்பு, கல்வி, விளையாட்டுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அடிமட்டத்திலான அதன் செயற்பாடு பல ஏழை மக்களுக்கு நன்மை புரிந்துள்ளது.

இதுகால வரை இச்சங்கம் நிறைவேற்றியுள்ள பாரிய பணிகளைப் பாராட்டுவதுடன் எதிர்காலத்திலும் அது மேலும் பெரிய வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இச்சங்கம் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் திறமையான வழிகாட்டலில் வளர்ந்துள்ளது. அவர் தமது நேரம், சக்தி, செல்வாக்கு அனைத்தையும் பிரயோகித்து சங்கத்தின் வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்கியுள்ளார். திரு. ஸ்ரீபாஸ்கரன் மக்களுக்கு ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி இச் சங்கம் மல்லாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்துக்கு "ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானம்" என்று பெயர் சூட்டியுள்ளது.

மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்யக்கூடியதாக ஸ்ரீபாஸ்கரன் மேலும் பல்லாண்டுகள் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் அ. துரைராசா
(யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்).

## பல்லாண்டு வாழ்கவே!

பல்லாண்டு வாழ்கவே பார்பரவு மாண்பெனுஞ்
சொல்லாண்டு சேவைசெய் தொண்டாலே—மல்லைக்
கிராம முன்னேற்றச்சங்கம் சீர்த்தி மணிச்சீர்
யராவுமுயர் பாஸ்கரன்நேற் பார்த்து.

நம. சிவப்பிரகாசம் J.P.U.M.
சட்டத்தரணி.
மல்லாகம்.
(தொடர்ச்சி 4ஆம் பக்கத்தில்)

## DEDICATED SERVICE

It gives me very much pleasure to offer congratulations to you all on the important occasion of the Mallakam Development Society's Ruby Jubilee. Your organisation has for 40 years carried out devoted and sacrificial service to the people in the Jaffna Peninsula and it is appropriate it coincides with the Diamond Jubilee of your President Mr. S. Sribaskaran whose sacrificial and dedicated service over a long period of time, must make him one of Sri Lanka's outstanding leaders since independence. Over this period of time our Human Rights — First the Child NGO has maintained a close association with Mr. Sribaskaran and we are all hopeful that peace will soon be restored in the Jaffna Peninsula and the huge job of rehabilitation that is so urgently needed will be provided by many sympathetic people and countries around the world.

Our voluntary aid agency has been working in Ceylon, now Sri Lanka, for 30 years on humanitarian aid and livestock breeding programs as we have always looked on the rural people as peaceful and hardworking with strong religious convictions. We sincerely trust the 40 th Anniversary of the Mallakam Rural Development Society which has peen linked in with 60 Years of devoted service by Mr. S. Sribaskaran, will quickly bring an end to the ethnic violence which has persisted over the years.

We convey our congratulations and best wishes to Mr. S. Sribaskaran and all people of Mallakam Rural Development society for peace, goodwill and happiness in the years that lie ahead.

Human Rights — First The Child
Cranbourne
Australia

Len Reid
President

## VALUABLE CONTRIBUTIONS

We would like to congratulate you on the occasion of the Ruby Jubilee of your Society and the Diamond Jubilee of your President, Mr. S.Sribaskaran. Your Society's contributions are extremely valuable, especially at this time that Sri Lanka is experiencing social convulsions. We pray and hope that your country will reconcile with itself, and a long - lasting peace based on justice and love will someday prevail. Your society faces such tough challenges in the years ahead, and we wish you all the best.

The Asian Health Institute Foundation
ACHI. 470-01 JAPAN

Hiromi Kawahara, M.D.
Executive Director


### பாராட்டி வாழ்த்துவோர்

**புகழ் ஸ்ரோர்ஸ்**
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.

**குவின்ஸ் நிறுவனம்**
விமலம்,
நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**வீனஸ் தங்க மாளிகை**
இல. 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ரஞ்சனாஸ் புடைவை மாளிகை**
இல. 04, மத்திய சந்தை, சுன்னாகம்.

**டயமன் ரேடேர்ஸ்**
இல. 12, Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**ஜெயந்தா அரைக்கும் ஆலை**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

**ஜெயா காமன்ஸ்**
பரித்திக்கலட்டி, சுன்னாகம்.

**இலக்குமி விலாஸ்**
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.

**ராஜா மருந்துக்கடை**
சுன்னாகம்

**பிரபாகரன் கபே**
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**வைத்தியகலாநிதி A. சிவபாதம்**
வங்களா ஒழுங்கை, மல்லாகம்.

**Dr. B. சுந்தரேஸ்வரன்**
சுந்தரவேல் வைத்தியசாலை, மல்லாகம்

**திருமகள் அழுத்தகம்**
இல. 87 கே. கே. எஸ். வீதி சுன்னாகம்.

**கணேசன் ஸ்ரோர்ஸ்**
இல 201, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவன் மாளிகை லிமிடெட்**
இல. 168, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

**தயா மரக்காலை**
கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

**பரணி ஸ்ரோர்ஸ்**
நீதி மன்ற வீதி, மல்லாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஐந்து மாதங்கள் நிரம்பிய சுண்டேகரி பாமா, மூன்று மாதங்கள் நிரம்பிய சில்கி, பன்ரம், கறுப்பு பாமாஸ் கோழிகள் இன்று மட்டும் விற்பனைக்கு உண்டு. இல. 21, ராதா லேன், வண்ணார் பண்ணை. (29412)

மிகவும் நல்ல நிலையிலுள்ள வீட்டிற்குரிய கண்ணாடி சோக்கேஸ், குசன் செற்றி, டைனிங் ரேபிள், மர அலுமாரி, மீன் தொட்டி, மீன் தொட்டிக்குரிய மோட்டார். விற்பனைக்குண்டு. சி. நாதன், 16/8, விதானையார் வீதி, சண்டிக்குளி. (29397)

இறைச்சிக் கோழிகள், சனி, ஞாயிறு, புதன்கிழமை களில் காலை 8-00—10-30 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29410)

Lohmann Brown சேவற் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Habbard Golden Comet பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 14-2-94 அல்லது 17-2-94 பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29409)

முட்டையிடும் இசக்ஸ் பிறவுன், வெள்ளை, கறுப்பு ஆகிய நிறங்களிலும், பாபடிக் கல்ஸ், யாமாஸ், ஸ்பங்கிலர், நான்கு மாதம் நிரம்பிய பிறாமா ஒரு சோடியும், லோமன் பிறவுன் அடை முட்டைகளும் உடன் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (29386)

1½ வயதுடைய யப்பானிஸ் பிச் ஆண் நாய், 1½ வயது பொமனேரியன் பெண் நாய், மூன்று மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண் குட்டி, கறுப்பு, சிவப்பு, வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா, குலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. (29394)

இறைச்சிக்கோழிகள் ஒரு கிலோவிலும் அதற்கு மேற்பட்ட நிறைகளிலும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 698/18, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம். (29387)

இரண்டு போத்தல் பால் எடுக்கக்கூடிய யமுனாபாறி ஆடும், அதன் இருபது நாட்கள் நிரம்பிய இரண்டு கடாக் குட்டிகளும், சனல் கலப்பு பால் ஆடுகளும் விற்பனைக்கு உண்டு. கனகசிங்கம், இல: 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (29391)

வான்கோழிகள். Fantail, கறணம் புறாக்கள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29373)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பெற்றோல் எஞ்சின் ஒக்ஸ் போர்ட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ. முத்துவேல், இல. 48/1, 1ஆம் ஒழுங்கை [ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7322)

## சனி மாற்றம்

11-2-94 சனி மாற்றம் ரூபா 10/- புதிய வெளியீடு விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், இந்தியச் சஞ்சிகைகள் கிடைக்குமிடம்: ஆனந்தீஸ் புத்தக நிலையம், இல. 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (26405)

## இப்போது கிடைக்கும்

பாலர் பாடசாலைக்குரிய அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ், ABC Book விற்பனைக்கு வந்துவிட்டது. சிவா பிறிண்டேர்ஸ், கைதடி, சோபிதா, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (6957)

## சனி பெயர்ச்சி

சனி பகவான் 11-2-94 முதல் 23-4-94 வரை 12 ராசிகளுக்கும் ஒரே புத்தகம் விலை 20/- கணிப்பு: எஸ். வெங்கடராமையங்கார், தியாகநகர், சென்னை. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7235)

## CD 70 - விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிவப்பு நிற CD-70 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அறிவகம், புத்தகசாலை அருகில் 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கருகில், யாழ்ப்பாணம். (சி-7236)

## அரைத்த உப்பு

எமது தொழிற்சாலைக்கு சுத்தமான அரைத்த உப்பு தேவையாக உள்ளது. தொகையாக வழங்கக் கூடியவர்கள் உடன் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி/7329)

## மணமகன் தேவை

அந்தண வகுப்பைச் சேர்ந்த A/L படித்த, 31 வயது அழகிய பெண்ணுக்கு (பரணி, உதயச் செவ்வாய்) நிரந்தரத் தொழில் புரியும் நற்பண்புடைய மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் தொடர்பு: இல. 608, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (29392)

## மணப்பெண் தேவை

அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பிரான்ஸில் தொழில் புரியும் 33 வயது, அழகிய ஆணுக்கு 25—29 வயது அழகும், நற்பண்புமுள்ள O/L படித்த மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் தொடர்புகொள்க. இல. 609, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29393)

## மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 33, 36 வயது T. A.க்கும், 31, 32 வயது டாக்டர்களுக்கும், பிரான்ஸிலுள்ள மணமக்களுக்கும் மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (29414)

பிரான்ஸில் உத்தியோகம் ார்க்கும் 38, 27 வயது சுத் தோஷிகருக்கும் செவ்வாய்க் குற்றமற்ற 29 வயது மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (29413)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித் தகைமை க. பொ. த. (சா/த) சனி, ஞாயிறும் நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6962)

## ஒத்துமாறல்

யாழ். மாவட்டத்து பாடசாலை ஒன்றில் பயிலுநர் ஆசிரியையாக (Primary) கடமையாற்றுபவர். அதே தராதரம் உள்ள மானிப்பாய் கல்விக் கோட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியருடன் ஒத்து மாற விரும்புகிறார். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 605, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29388)


## பழைய சாக்கு, பை

எமது தொழிற்சாலையில் பழைய சாக்கு, உரப்பை, என்பன விற்பனைக்கு உள்ளன. வாங்க விரும்புவோர் பார்வையிட்டுக் கூறுவிலையை 18-2-94 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-7328)

## அபராதம்

அனுமதிப் பத்திரம் இன்றி லொறியில் விறகு ஏற்றிய நபருக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் பூவேந்தன் விறகுகள் வெட்டுவதை தடை செய்யும் சட்டத்தின் கீழ் ரூபா 10 ஆயிரம் அபராதம் விதித்தார். (இ-177)

## 95ஆம் நாள் கண்ணீர் மழையினிலே



### லெப்டினன்ட் மெய்யப்பன்

யோகராசா சுரேஸ்குமார் (கண்ணன்)

மழலையாக: 31-03-1971

மாவீரனாக: 11-11-1993

மெய்யப்பன் எனும் நாமம் மெய்யாகப் பொருந்தியதே
மெய்யானது எது என்று அறியவோ முற்பட்டாய்
தன் மானம் தனைக் காத்து தரணியிலே முன் நின்றாய்
தமிழ் மானம் தனைக்காக்க பேரணியில் முன் சென்றாய்
காளைப் பருவமது கண்ணன்- சுரேஸ்குமார்-உன்தன்
கற்பனைக் கதைகள் யாவும் கனவாகிப் போனதென்ன
பெற்ற தாய் உன்வரவைப் பெருமையுடன் நோக்கிநிற்க
பெரிய தாய் உன் வரவை ஏங்கி எதிர் நோக்கி நிற்க
களத்தினிலே தோளுயர்த்தி சென்றாய் மன்னா
ஈழத்தின் விடிவிற்காய் வித்தான வீரா
தமிழ் ஈழத்தில் இன்னொருகால் வருவீரா கண்ணா?

கண்ணீர்த் துளிகளால் அஞ்சலி செய்யும்:
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், தம்பி, பெரியப்பா, பெரியன்ரி, சித்தி, மாமாமார், மற்றும் சகோதரர்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (6964)

## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் றேபான்

கருணா – சுமதி தம்பதிகளின் தவப்புதல்வன் றேபான் தனது 2ஆவது பிறந்த நாளை சுவிட்சர்லாந்தில் இன்று 13-02-94 இல் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அத்தைமார், அன்ரிமார், காந்தன் மாமா (சுவிஸ்), சுயராஜ் மாமா (சுவிஸ்), சிறி சித்தப்பா (சுவிஸ்), ராசன் சித்தப்பா (லண்டன்), மோகனா குடும்பத்தினர் (ஜேர்மன்), வேலாயுதம் குடும்பத்தினர் (பிரான்ஸ்), குஞ்சு மாமா (ஜேர்மன்), நேசராசா ஜெயா குடும்பத்தினர் (யாழ்ப்பாணம்), செல்வம் குடும்பத்தினர், பூட்டன், பூட்டிமார், நாச்சி அம்மன் துணை கொண்டு பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

கனகரட்ணம் குடும்பத்தினர்,
(ஐபோம்)
"சுபா அகம்"
கொக்குவில்.

பசுபதி குடும்பத்தினர்,
இருப்பா இல்லம்.
யாழ்ப்பாணம். (29416)

## மல்லாகம் கிரா அபி சங்கம்..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### WE CELEBRATE WITH YOU

With congratulations and joy we celebrate with you your Ruby Jubilee and Diamond Jubilee as president of the Mallakam Rural Development Society. It is the occasion of remembrance of the dental equipment we sent you which was absconded by the government, the occasion of remembering the newspapers you sent us which we forwarded to different members of the United Nations to remind them for whatever they might do to alleviate the situation in your country.

It is great indeed to celebrate this auspicious occasion and to wish you continued long life, and joy in your accomplishments in Mallakam.

American Dentists for Foreign Service, Inc.
New York
U. S. A.

Herman Ivanhode
DDS, FACD, FICD, LLD
Director

### பாராட்டி வாழ்த்துவோர்

ஈஸ்வரி மரக்காலை — கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

சித்தி மெடிக்கல் சென்ரர் — புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.

கருணா இரும்பு ஓட்டுவேலைத் தொழிலகம் — கே. கே.எஸ். வீதி, சுன்னாகம்.

ரவி - அரைக்கும் ஆலை — நீதிமன்ற வீதி, மல்லாகம்.

கணேஸ் பத்திரிகைக் கடை — மல்லாகம் சந்தி, மல்லாகம்.

திலகர் பலசரக்கு மொத்த விற்பனை நிலையம் — கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

குவிரகுவி அன் நியூ சித்திரகலா — இல. 68, 70, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

ரட்ணம் மில் — ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

ஏ. கே. எஸ். கிறைண்டிங் மில் — கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(விளம்பர இலக்கம் 29313)

---

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(ரி. ஆர். ஆர். ஓ)
நடத்தும்

## நீர் இறைக்கும் இயந்திர திருத்தல் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பமாகின்றன

தகைமை:- க. பொ. த (சா. தரம்)வரை படித்திருத்தல் வேண்டும்.

காலம்:- 4 மாதம்

இடம்:- உரும்பிராய் ரி. ஆர். ஆர். ஓ உபகாரியாலயம்,

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் 16-02-1994 புதன் காலை 9-00மணிக்கு நேரில் சமூகம் தரவும்.

குறிப்பு:- இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**ரி. ஆர். ஆர். ஓ. உபகாரியாலயம்,**
மானிப்பாய் றோட், உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.
(சி-7324)

---

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION — O.B.A — S.P.C — PRO VERITATE ET JUSTITIA

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

* பலரின் வேண்டுகோள்களுக்கிணங்கவும் தொழில்புரிவோரின் நன்மை கருதியும் எமது நிறுவனத்தில் இரவுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.
* (கணனித்துறையில் உறுதியான கல்வியைப் பெற எமது நிறுவனம் வழங்கும் ஓர் அரிய வாய்ப்பு)

### 1. COMPUTER PROCESSING COURSES

(A) BEGINNER'S COMPUTER STUDIES
★ DURATION: 4 Months

(B) ADVANCED COMPUTER STUDIES
★ DURATION: 6 Months

(C) DIPLOMA IN COMPUTER STUDIES
★ DURATION; 9 Months

★ Equipment Used:
LASER XT/2. LASER XT/3
386 and BITCOM COMPUTERS
(I B M Compatibles)
(THEORY AND PRACTICALS)

COMMENCING DATE:
**16-02-1994**
WEDNESDAY
Time: 6-30 p m

WEEK DAYS & WEEKEND CLASSES

### 2. SPECIAL ENGLISH CLASS

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகலவிதமான ஆங்கிலப் போட்டிப் பரீட்சைகளில் சிறந்த முறையில் சித்தி பெறக்கூடிய வகையில் மிகக்குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

★ DURATION 4 Months

### 3. SPOKEN ENGLISH CLASS

ஆங்கில அறிவை சிறந்த முறையில் வளர்க்கவும், நன்றாக ஆங்கிலம் பேசவும் ஏற்ற வகையில் குறுகிய காலப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

★ DURATION: 3 Months

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன் உயர்-கல்வி நிறுவனம்.
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,**
59, St. PATRICK'S ROAD,
JAFFNA.

[சி-7326]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## விவேகானந்தரின் அறை கூவல்

சகல மதங்களையும் ஒன்றென நோக்கிய சமய சமரச ஞானி சுவாமி விவேகானந்தர்.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் சர்வமத சபையில் எழுந்து நின்று அந்த இந்து மத இளஞ்சிங்கம் இந்து மதத்தின் பரசமய நோக்குப் பற்றி முழங்கிய கர்ஜனை உலக மக்களின் இதயத்தை ஊடுருவி, அவர்கள் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பியது.

உடல், உள, ஆன்மீகத் தூய்மையை எய்துவதற்கு வழி காட்டிய மாபெரும் ஆன்மீக ஞானி அவர். மதம் வெறும் சடங்கல்ல; வாழ்க்கை நெறி என்று உணர்த்திய ஞானச் செம்மலும் ஆவார்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ உரையின் நூற்றாண்டு விழாவை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் கொண்டாடினர்.

சுவாமி விவேகானந்தர் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய — இந்து - இளம் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப முழங்கிய கர்ச்சனை — மதம் சார்ந்த போதனை — இன்று விடுதலைக்காகப் போராடும் ஈழத் தமிழர்களுக்குப் பொருத்தமாக இருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இந்த மாபெரும் மதஞானி, விடுதலை வேட்கைக்கு வழிகாட்டவும் தவறவில்லை.

அவரது அருளுரை ஆத்மீக விடுதலை குறித்து மட்டும் கூறுவதல்ல. லௌகீக வாழ்க்கையில் பெறவேண்டிய — நாம் போராடி எடுத்துக் கொள்ள வேண்டிய — விடுதலையையும் அது சுட்டி நிற்கிறது.

இளம் சமுதாயத்தைப் பார்த்து அந்தத் துறவி விடுக்கும் அறை கூவலின் சுருக்கம் இதுதான்:-

''எழுந்து நில்! தைரியமாக இரு! வலிமையுடன் இரு! பொறுப்பு முழுவதையும் உன்தோள் மீதே சுமந்து கொள்! உனது விதியைப் படைப்பவன் நீயே அதனைப் புரிந்து கொள்! உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன''

—இந்த ஆலோசனை தனி மனிதனுக்கு மட்டும் உரியது என நாம் கொள்ள வேண்டியதில்லை. அது தனி சமூகத்துக்கும் உரியது! தனி இனத்துக்கும் உரியது: தனி நாட்டுக்கும் உரியது.

''நாம் ஈழத் தமிழர்கள் எழுந்து நிற்போம், வலிமையுடன் இருப்போம். பொறுப்பு முழுவதையும் நமது தோள் மீதே நாமே சுமந்து கொள்வோம். நமது விதியைப் படைப்பது நாமே அதனைப் புரிந்து கொள்வோம். எமக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் எமக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன என்பதை உணர்வோம்'' — சுவாமி விவேகானந்தர் மக்களில் ஒருவருக்குச் சொன்ன ஆலோசனையை நமது இனத்துக்குரியதாக மாற்றிக் கொண்டால் நமக்குக் கிடைப்பது இந்த அறிவுரைதான்.

இந்த அறிவுரை கூறும் வழியில்—

எமது மக்களின் — எமது இளைஞர்களின் தியாகத்தால்தான் — எமது விடுதலை வேள்வி இயற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் பிறர் பலத்தை நம்பி— பிறரிடம்— கையேந்தி எமது போராட்டத்தை— இன விடுதலையை — முன்னெடுக்கவில்லை. எமது மக்கள்— எமது இளைஞர்கள்— எமது சக்தி என்ற எம்மில் நாமே தங்கி எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்க வீறு கொண்டு எழுந்துள்ளோம். எமது தர்ம முயற்சி வெல்லும் என்பதில் சந்தேகமில்லை.

அன்று அந்த இளம் துறவி, தன்னாட்டு மக்களுக்கு விடுத்த அறை கூவலுக்கு—

இன்று யதார்த்தத்தில் செயலுருக் கொடுத்து நிற்கிறது தமிழ்முத் தாயகம்.

# இனப்பிரச்சினைப் பந்து இப்போது அரச பக்கத்தில்; அதனை தக்கபடி எடுத்து ஆட்டத்தை முடிக்குமா?

யுத்தம் தொடங்கிய பின்னர், வடக்கில், ஜனவரி- பெப்ரவரி மாதங்களில் புதிய பருவகாலம் ஒன்று வருவது வழக்கமாகிவிட்டது. ஆம். ஆண்டின் முற்பகுதி தெற்கிலிருந்து நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வடக்கே வரும் பருவகாலமாக மாறி வருகிறது.

அந்த வகையில் இம்முறையும் கடந்த மூன்று வாரங்களில் மூன்று நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அதி. வண நீக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ தலைமையில் வந்த குழு கொழும்பு திரும்பி விட்டது. அங்கிலிக்கன் பேராயர் அதி. வண கென்னத் பெர்ணாண்டோ, மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் வண. கிங்ஸ்லி முத்தையா ஆகியோர் தலைமையிலான இரண்டு நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் இன்னமும் யாழ்ப்பாணத்திலேயே உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு அடுத்துத் தொடுத்து வந்த இந்த மூன்று நல்லெண்ணத் தூதுக் குழுவினர், சுத்தமது மத சம்பந்தமான அலுவல்களுக்காகவே பிரதானமாக இங்கு வந்தனர். ஆனால் சமாதானத்துக்கான வாய்ப்பு உண்டா என்பதனை அறிவதும் அவர்களின் வருகையின் ஒரு நோக்கமாக இருந்தது. அதன் பொருட்டு அவர்கள் விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினர்.

அந்தச் சந்திப்புகள் நிகழ்வதற்கு முன்னரே, நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்தும் நோக்கத்துடனேயே யாழ்ப்பாணம் வந்திருப்பதாக இங்குள்ள மக்கள் பலரும் நினைத்தார்கள். சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக அரசாங்கம்தான் பின்னால் இருந்து கொண்டு, இவர்களை அனுப்பியிருக்கக் கூடும் என்று சிலர் அநுமானித்தார்கள். ஒன்றில்லாவிடில் ஏதோ ஒன்றின் மூலம் நல்ல பெறுபேறுகள் கிடைக்கலாம் என்று நம்பியவர்கள் பலர்.

யாழ்ப்பாணம் வந்த மூன்று தூதுக்குழுக்களும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசின என்ற செய்திகளைப் படித்ததும் எம்மவரில் பலரும் இப்போதுள்ளதைவிட ஒரு சிறிய மாற்றமாகுதல் உண்டாகலாம் என நினைத்தனர்.

ஏன். தூதுக்குழுக்கள் சமாதானத் திட்டங்களுடன் வந்திருக்க வேண்டும்; அவை குறித்தே விடுதலைப் புலிகளுடன் பேசியிருக்க வேண்டும் என்று கருதியவர்களும் உளர். இந்த வரிசையில் சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசியதையும் மக்கள் சேர்த்துக் கொண்டனர்.

### ஊகங்களுக்கு விடை

இத்தகைய ஒரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் வெள்ளிக்கிழமை இரவு நடத்திய செய்தியாளர் மாநாடு, தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த ஊகங்கள், நம்பிக்கைகள், சந்தேகங்களுக்கு விடை தரும் வகையில் அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன? அவர்களின் எதிர்பார்ப்பு என்ன? — என்பதை திரு பாலசிங்கம் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கும், வெளி உலகத்துக்கும் மிகத் தெட்டத் தெளிவாக்கி இருக்கிறார்.

அத்தோடு இங்கு வந்து போகும் நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் எங்கே நிற்கின்றன? அவற்றின் பணி எவ்வாறாக அமைய வேண்டும் என்பதனையும் அரசியல் ஆலோசகர் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இராணுவ ரீதியாக நோக்கும்போது, விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து சரித்திர வெற்றிகளைப் படைத்து மேலோங்கிய நிலையில் நிற்கிறார்கள். ஆகையால் பொது நியமப்படி பார்த்தால் அவர்கள் தாமாக வலிந்து சமரசத்துக்கோ பேச்சுவார்த்தைக்கோ போகவேண்டிய தேவை இல்லை.

ஆனால் தங்கள் வெற்றியின் பயனைப் பெறுவதற்காக, தீர்வு ஒன்று வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் அதனைப் பரிசீலித்து ஒரு சமரசத்துக்கு வருவதற்குத் தயாராகவே இருக்கிறார்கள் என்பதனை திரு. பாலசிங்கம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அரசியல் தீர்வு ஒன்றை விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். அவர்களின் தமிழ் மக்கள் சார்பான ஆயுதப் போராட்டத்தின் நோக்கம் அரசியல் தீர்வு ஒன்றை நாடியது தான்.

இதனை யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்தே அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். 1990ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று அவர்கள் யுத்த நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து சமாதானக் கதவை திறந்து வைத்தார்கள். அரசியல் தீர்வே தமது நோக்கம் என்பதற்குச் சமிக்ஞை காட்டினார்கள்.

எனினும் அப்போதிருந்த

## பேச்சுக்கு முட்டுக்கட்டை போட இனவாதக் குழுக்கள் மும்முரம்

பிரேமதாசாவும், ரஞ்சன் விஜேரத்தினாவும் அந்தச் சமிக்ஞையைக் கண்டு கொள்ளாதவர்கள் போல வாளாவிருந்து விட்டார்கள். சில குதர்க்கங்களை கூறி நாட்களைக் கடத்தினார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் தாம் அப்போது திறந்து வைத்த சமாதானக் கதவுகளை இன்னும் மூடிவிடவில்லை.

இராணுவ ரீதியாக மேலோங்கி நிற்கும் இன்று கூட அந்தக் கதவுகளை மூடிவிட முனையவில்லை என்று விடுதலைப் புலிகள் மீண்டும் நினைவுபடுத்தியிருக்கிறார்கள்.

### நாடி பார்க்க வந்தவர்கள்

இதற்கு மேல் செயற்பட வேண்டியது அரசாங்கம் தான். இராணுவ ரீதியாகத் தோல்வி கண்டு, வீழ்ந்திருக்கும் அரசு, முறையின்படி சமரசத்துக்கு வருவதற்கு தானே முயற்சிக்க வேண்டும்.

சூரியகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

விடுதலைப் புலிகள் என்ன மனோநிலையில் (Mood இல்) இருக்கிறார்கள் என்பதனை நாடி தொட்டுப் பார்க்க வந்தவர்களாக நல்லெண்ணத் தூதுக்குழுக்களை எடுத்துக் கொள்ளலாம்.

அவற்றைப் பயன்படுத்தி அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இது நல்ல தருணம்.

விடுதலைப் புலிகள் எப்போதுமே நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தையையே விரும்பினார்கள்; வலியுறுத்தியும் வருகிறார்கள். இப்போதும் நிபந்தனை எதுவும் விதிக்காமலே தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று நல்லெண்ணத் தூதுக்குழுக்களிடம் தகவல் கூறியிருக்கிறார்கள்.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தேவையான சமாதானச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்; அத்தகைய ஒரு சூழ்நிலையை, போர் நிறுத்தம் செய்வதன் மூலமும், பொருளாதாரத் தடையை நீக்குவதன் மூலமுமே தோற்றுவிக்கலாம். அத்தகைய சுமுக நிலையை உண்டாக்குவதற்கு அரசாங்கத்தைத் தூண்ட முடியுமானால் அந்த உதவியைச் செய்யுங்கள் என்ற தகவலும் நல்லெண்ணத் தூதுக்குழுக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது.

சமாதானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது ஒருபோதும் நிபந்தனையாக முடியாது. பேச்சுவார்த்தைக்குத் தேவையான பிரதான அம்சம்— தகுதி— அதுவாகும். இதனை ஒரு நிபந்தனை என்று அரசு கூறுமானால், எல்லாக் காலங்களையும் போலவே, பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறுவது இம் முறையும் வெளிப் பேச்சுக்கு என்றாகிவிடும். ஏற்கனவே பல தடவைகள் அரசாங்கம் அத்தகைய நாடகத்தையே ஆடி வந்திருக்கிறது.

அரசியல்

எனவே சமாதானப் பேச்சுக்கான சுமுக நிலையை உருவாக்கினால் மட்டுமே அதனை ஒரு உரிய சமிக்ஞையாகக் கொள்ள இடமுண்டு தமிழர் தரப்பில் அரசின் மீது ஒரு நம்பிக்கை பிறப்பதற்கு இது ஆகக் குறைந்த தேவை என்று கூறலாம்.

### சாட்சிகள்

விடுதலைப் புலிகள் தாம் சமாதானப் பேச்சுக்கு தயார் என்பதற்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்களை சாட்சியாக வைத்து அவற்றின் மூலம் சமிக்ஞை காட்டியிருக்கிறார்கள். இம் முறையாவது அந்தச் சமிக்ஞையை கண்டு கொண்டு அரசு செயலில் இறங்குகிறதா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்குத் தயார் என்று கூறிய போதெல்லாம், அதனைத் தட்டிக் கழித்துச் செல்லுபடியற்றதாக்குவது அரசின் வழக்கம்.

புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள். மீண்டும் தம்மை ஆயுத, ஆளணி வகைகளால் பலமடையச் செய்வதற்கு அவர்களுக்கு அவகாசம் தேவைப்படுகிறது. அவ்வாறு பலம்பெற்று மீண்டும் பெரிதாகத் தாக்குவதற்கு காலம் வாங்குவதே அவர்கள் பேச்சுவார்த்தை என்று கூறுவதன் அர்த்தம் — என்பது அரசின் தட்டிக் கழிப்பாக இருந்தது.

ஆனால் இம்முறை அப்படிக் கூறமுடியாது. விடுதலைப் புலிகள் பலமான நிலையில் நின்று கொண்டே சமாதானப் பேச்சுக்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே இப்போது பந்து அரசாங்கத்தின் பக்கத்திலேயே உண்டு. அதனைத் தக்கபடி விளையாடி ஆட்டத்தை முடிக்க அரசு விரும்புகிறதா? இங்கு வந்து போன நல்லெண்ணத் தூதுக்குழுக்களால் அரசின் கையில் பந்தை எடுத்தாவது கொடுக்க முடியுமா? இப்போதுள்ள கேள்விகள் இவையே!

★ ★ ★

இனப்பிரச்சினை — வடக்கு கிழக்கு யுத்தம் — என்ற பந்தை அரசாங்கம் கையில் எடுத்து தக்கபடி விளையாடுமா என்பதற்கான சாதகமான அறிகுறிகள் உடனடியாகத் தென்படவில்லை. பாதகமான காட்சிகளே தெரிகின்றன.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற விருப்பம் தென்னிலங்கையில் சாதாரணதர மக்களிடையே ஓரளவுக்கு வளர்ந்து வருகிறது என்பது உண்மைதான். ஆனால் அரசியல் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள் மட்டத்தில் அதற்கான விருப்பத்தைப் பெரிதாகக் காணமுடியவில்லை.

வடக்கைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் பல கல்விமான்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. [illegible] மற்றும் [illegible] பலரும் அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடுவதை ஆதரிக்கிறார்கள். போரில் வெல்வதற்கான சகல முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறு மனவுக்கு இருக்கிறார்கள் என்பதை அவர்களுடன் உரையாடியதில் தெரிந்துகொள்ள முடிந்ததாம். சமஷ்டித் தீர்வு காணப்பட்டால்கூட, அது நாடு பிளவுண்டு போவதற்கான அத்திவாரமே என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இவர்களைப் போன்றவர்களின் ஆதரவுடனும், ஆலோசனையுடனுமே இனவாத விஷத்தை விஜேதுங்கா கக்கி வருகிறார் என்பது மிகத் தெளிவாகப் புலனாகின்றது.

ஜனாதிபதி, அநுராதபுரம் உடுநுவரப் பகுதிகளில் நிகழ்த்திய உரைகள் சிங்களவர்களை 1956 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கு மீண்டும் அழைத்துச் செல்லும் அளவுக்கு மோசமாக இருந்தன. ஆங்கிலப் பத்திரிகைகளும், சிங்களப் பத்திரிகைகளும் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து இனத்துவேசத்தைத் தூண்டி வருகின்றன.

### இனத்துவேசப் போக்கு

தேசப்பிரேமி பிக்குகள் முன்னணி, சிங்கள சட்டத்தரணிகள் சங்கம் போன்ற அமைப்புகள் இனத்துவேசத்தைப் பெருக்கிப்பரப்பி வருகின்றன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது அது பகலிலேயே பள்ளத்தில் வீழ்வது போலாகும். பேச்சுவார்த்தைக்குத் துணை போகும் மதகுருமாரின் முயற்சியை முறியடிக்கவேண்டும். இதற்கு அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும்— என்றவ ... எல்லாம் பிரசாரம் செய்து அவை சமாதானப் பேச்சுக்கு முட்டுக்கட்டைபோட முயல்கின்றன.

இத்தகைய இனவாதப் போக்கை எதிர்கொண்டே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதானப் பேச்சுக்கான சில மறைமுக ஆரம்ப முயற்சிகளில் இறங்கினார் என்று சொல்லப்படுகிறது. தமிழர்களையும் ஏனைய சிறுபான்மையினரையும் புறக்கணித்துப் பதவிக்கு வருவதற்கு விஜேதுங்கா முயல்கிறார். ஆனால் ரணில் யுத்தத்துக்கு முடிவு கட்டினால் மட்டுமே நாட்டைக் கட்டி எழுப்ப முடியும் என்ற சிந்தனையுடன் செயற்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு முன்னர் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு உண்டாம். அவர் விஜேதுங்காவின் இனவாதப் போக்கை விரும்பவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது விடயத்தில் மட்டுமன்றி ஜனாதிபதி தேர்தல் முறையை மாற்றுவது போன்ற விடயங்களிலும் விஜேதுங்கா தான் தோன்றித்தனமாக நடந்து வருகிறார் என்ற கவலை ரணிலுக்கு மட்டுமன்றி மற்றும் பல மூத்த அமைச்சர்களுக்கும் மனவருத்தத்தைக் கொடுத்திருக்கிறதாம்.

கத்தோலிக்க பேராயர் அதி. வண நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ மூலம் புலிகளின் நிலைப்பாட்டை அறிய ரணில் முயற்சிப்பதைத் தெரிந்து கொண்ட விஜேதுங்கா—

தமக்கு நம்பிக்கையானவரான, தன்னுடன் மிக நெருங்கியவரான, சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ ரி ஆரியரத்னாவை அனுப்பியிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

**உதயகாந்தன்**

கத்தோலிக்க திருச்சபை கூறுவதை விட ஆரியரத்னா கூறுவதையே விஜேதுங்கா கவனத்துக்கு எடுப்பார் என்று கூட எதிர்பார்க்கலாம்.

அமைதியாக வந்த, சிறிய உருவமான ஆரியரத்னா பெரிதாக எதனையும் சாதிப்பாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எப்படியோ—

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், ஆளுங் கட்சிக்குள் பெரும் உட்கட்சிப் பூசல்கள் வெடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த எரிமலை எப்போதும் வெடிக்கலாம் என்ற நிலையில் அரசாங்கத்தின் பக்கத்திற்குள் விழுந்த பந்து, அப்படியே அடிக்கிணற்றில் இட்ட கல்லாகக் கிடந்து விடுமோ என்னவோ...... அதற்கும் எதிர்வு கூற உடனடியாக முடியாது.

★

தமிழீழ மண்ணில் அறிவியல் உலகம் படைக்க
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின்

**மாணவர் அறிவியல் கழகம்**

இணுவிலில் தனது செயற்பாட்டை 1994-02-16 மாலை 3 00 மணிக்கு ஆரம்பிக்கின்றது

-- விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

[29422]

**இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்**

**14ஆவது இசை விழா**

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

**இரண்டாம் நாள் - இன்று**

''யோகாஸ் புடைவை மாளிகை'' ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
- என். ராஜன், என். பரந்தாமன், எஸ். கதிரமலை, எம். சம்பந்தன் — நாதஸ்வரம்
- ரி. சுந்தரலிங்கம், எம். சுதா, ரி. கணேசன், எம். ராஜேந்திரம், ரி. ராஜேந்திரம், ஜி. மகேந்திரன் — தவில்

**5-00 — 5-20** பாட்டு
- என். சுகிர்தா, என். சுகன்யா, ரி. தர்மினி, ரி. காயத்திரி, கே. தர்ஷினி, கே. மயூரி, எம். நர்மதா — பாட்டு
- என். சுகன்யா — வயலின்
- யூட்ஜெமில்ராஜ் — மிருதங்கம்

**5-20 — 5-40** வீணை இசை
- பஞ்சமூர்த்தி வஸந்தா, கானமூர்த்தி காயத்திரி, புஸ்பராஜா சுஜீபா — வீணை
- எஸ். துரைராஜா — மிருதங்கம்

**5-40 — 6-15** புல்லாங்குழலிசை
- தட்சாயினி லிங்கநாதபிள்ளை — புல்லாங்குழல்
- ஏ. ஜெயராமன் — வயலின்
- சதா வேல்மாறன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
- எம். ஸ்ரீரங்கநாதன் — பாட்டு
- எஸ், வெங்கடேசசர்மா — வயலின்
- எஸ். பாலச்சந்திரசர்மா — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
1. திரு. என் பத்மகுமார் (யோகாஸ் புடைவை மாளிகை)
2. திரு. பாலசுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ்)
3. திரு ''கலா'' (சைமன் வர்த்தக நிலையம்)

அருளுரை:
சோ. தண்டபாணிதேசிகர் (பிரதமகுரு அம்பாள் கோயில், வல்வெட்டித்துறை)

தலைவர்:
நாதஸ்வர வித்துவான் V. K பஞ்சமூர்த்தி

பிரதம விருந்தினர்:
கலாநிதி சபா ஜெயராஜா (தலைவர், இராமநாதன் நுண்கலைப் பிரிவு)

சிறப்பு விருந்தினர்:
திரு சி. புலேந்திரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

**7-30 — 8-30** இசைக்கச்சேரி
- எஸ். குமாரசாமி — பாட்டு
- ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
- கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**8-30 — 9-30** பரதநாட்டியம்
திருநெல்வேலி, பாரதி கலாமன்ற மாணவிகள்
தயாரிப்பு: ஞானமணி செல்லையா

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:
**வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[சி-7321]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனைப் பொருளியல் வகுப்புக்கள்
(DIPLOMA IN HOME ECONOMICS)

- ★ Dress Making — ஆடை அலங்காரம்
- ★ Food & Cookery — சிற்றுண்டி தயாரித்தல்
- ★ Hair Dressing — தலையலங்காரம்
- ★ Cake Decoration (Icing) — கேக் ஐசிங்
- ★ Handicraft — கைவேலை
- ★ Macrame — மக்ரம்

அத்துடன்

- ★ Flower Making — மலர் அமைப்பும் அலங்காரமும்

வகுப்புகள் ஆரம்பம்:- **14 - 2 - 1994**

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE.**
14 ST PETER'S LANE, JAFFNA.
[சி-7229]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 06 — 1907

மறைவு: 14 — 01 — 1994

### திருமதி பாக்கியம் சின்னத்துரை

அன்புடன் எங்களை ஆதரித்து வளர்த்த பாசம் மிகு தாயாரின் ஆத்மா, எம்பெருமான் திருவடிகள் சேர நாம் கைதொழுகின்றோம்.

மக்கள்

101, பலாலி வீதி,
சுந்தர்மடம். (29421)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி என். யோகராஜா
(இளைப்பாறிய பரியோவான் கல்லூரி ஆரம்ப பாடசாலை ஆசிரியை)

பிறப்பு: 28-07-1913

இறப்பு: 14-01-1994

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும், எமக்கு பலவழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (13-02-1994) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நல்லூர், முத்திரைச்சந்தி. பரி. யாக்கோப்பின் ஆலயத்தில் 15-02-1994 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவிருக்கும் ஆராதனையிலும், அன்பியட்சத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சகோதரன்: சு. கனகரட்னம்
மகன்: வனிதராஜன், மருமகள்: இந்திராணி

552, கல்வியங்காடு வீதி,
நல்லூர்.

(29402)


காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம்

# அபிவிருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்:- 14-2-94 திங்கள் பி.ப 2-30 மணி

இடம்:- யாழ். சன்மார்க்க வித்தியாலய மண்டபம்

தலைவர்:- திருமதி தே. பாலசிங்கம் - அதிபர்

பெற்றோர் அனைவரும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தே. பாலசிங்கம்,
அதிபர்.

(29404)

# தேவை

வீல்செயர் (Wheel Chair) விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். பாவித்தவை, பழுதடைந்தவையும் வாங்கப்படும்.

இல 604 C/o உதயன்

(29384)

# தேவை

அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் கீழ்க்கண்ட வேலைகளுக்கு நேரில் சமுகம் தரவும்.

1. விற்பனையாளர்கள்
2. கணக்குப்பதிவாளர்
3. விற்பனை உதவியாளர்
4. உதவியாளர்

அனுபவம், திறமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும். இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.

வேலை நாட்களில் 12-30 — 2-30 மணிவரைக்கும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
புதிய இலக்கம் 234
கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

(சி-7234)

# காணி விற்பனை

எழுது மட்டுவாள்

அழகான வளமான நிலம். இருபக்கம் அகண்ட நீரோடும் வாய்க்கால், மறுபக்கம் பிரதான வீதி, தென்னை, நெல்லுக்கு மட்டுமல்ல, கால்நடை பண்ணைக்கும் உகந்தது. 200 இப்பில் இப்பில், 300 தென்னை, நிலப்பரப்பு முழுவதும் முத்தாமணக்கு மட்டுமல்ல, மிகப்பெரிய கால்நடைப்பண்ணைக்கும். ஆமணக்கு எண்ணைத் தொழிற்சாலைக்கும் திட்டமிடப்பட்ட நிலம். எட்டு முழ ஆழத்தில் வற்றாத நீரூற்று. வருடத்தில் ஆறு மாதத்திற்கு மேல் வாய்க்காலில் இருந்து நீர்ப்பாய்ச்சல். மின்சாரம் வழங்க ஏற்கனவே திட்டமிடப்பட்ட பகுதி. எதிர்காலத்தில் இந்த நிலத்தின் பெறுமதி பல மடங்கு.

மொத்த நிலப்பரப்பு - 156

தொடர்பு: 14 — 02 — 94 தொடக்கம் 24 — 02 — 94 வரை காலை 8-00 — 9-00 மணி வரை

**சின்னையா சிவஞானம்**
[நாகம்ஸ் சினிமா முன்]
முத்துக் கிருஷ்ணர் வீதி
சுன்னாகம்,

[சி-2065]


## பிரதம குருவே! பெரும் பேறெய்துக!!

புங்குடுதீவு - கிழக்கு
கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான

பிரதமகுரு சிவஸ்ரீ

### பஞ்சாட்சர கணேசராஜக் குருக்கள்

சிவபதமடைந்துவிட்டார்கள்.

அன்னாரது ஆத்மா பேரா இயற்கைப் பெரும் பேறெய்திடக் கலட்டி விநாயகன் கழலடி இணைகளைப் பிரார்த்திக்கின்றோம்.

சு. கருணாகரன்,
தலைவர்.

கா. மதியாபரணம்,
ஆலய அறங்காவலர்.

பொன் ஐயாத்துரை சிவசாமி,
பொதுச் செயலாளர்.

கலட்டி விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை.

[29417]

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை
(ஆசிரியை, யா/ கோண்டாவில் இந்து ம. வி)

கடமைதனைக் கண்ணென மதித்து பச்சிளம் பாலகர்களைத் தன் மக்கள் போன்று மகிழ்வித்து கல்வி, கலை, ஒழுக்க சீலந்தனை வளர்க்கும் பணியில் ஆசிரியரனைவர்க்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைக.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
அபிவிருத்திச்சபை, பழைய மாணவர்

(29425)

## இன்று

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ''உளவளத் துணை'' என்ற தலைப்பிலான அறிமுகப் பயிற்சி நெறி இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை எழிலூர் பகுதியில் நடைபெறும். (த)

★ ★ ★

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வசதியற்ற பார்வை குறைந்த மக்களுக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் இரண்டாவது கண் சிகிச்சை பரிசோதனை முகாம் இன்று ஞாயிறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (த-117)

★ ★ ★

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும், தேசிய தொழில் பயிலுநர் அதிகார சபை சுருக்கெழுத்தாளர் தொழில் பயிலுநர்களும் (வடமராட்சி) இணைந்து நடத்தும் தட்டச்சுத் தந்தைகள் ''ஷோல்ஸ்'' மற்றும் ''முதிரையா'' ஆகியோரின் வார விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

★ ★ ★

கைதடி ஐக்கிய கிராமிய இராஜ்ஜியத்தினர், அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை இன்று ஞாயிறு கைதடி நவபுரம் பாடசாலையில் திரு ப. செல்லத்துரை தலைமையில் நடத்தவுள்ளனர். (க-117)

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14 ஆவது இசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள கலாமண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகளில் மங்கள இசை, பாட்டு, வீணை இசை, புல்லாங்குழல், இசை இசைக்கச்சேரி, பரதநாட்டியம் ஆகியவை இடம்பெறும்.

## கௌரவிப்பு

சித்த வைத்திய ஆய்வரங்கும், ஈழத்தின் சேவையில் மூத்த சித்த வைத்தியர்களைக் கௌரவித்தலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடியில் உள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அரங்கில் நடைபெற உள்ளன.

சித்த வைத்திய கலாநிதி திரு. சோ. சபாநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் கலந்து கொள்வார்.

புலிகளின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கேட்கவில்லை.

கேள்வி: அவர்கள் உண்மையாகத்தான் பேசுகின்றார்கள் என்று நம்புகிறீர்களா?

பதில்: அவர்கள் உண்மையாகத்தான் பேசினார்கள் என்று நான் நினைக்கின்றேன். நான் ஓர் அரசியல்வாதியல்ல என்று அவர்களுக்குத் தெரியும். ஒருவர் உண்மையானவரா என்பதை என்னாலும் உணரமுடியும்.

கேள்வி: இந்தச் செய்தியை நீங்கள் ஜனாதிபதியிடம் கொடுத்த போது அவருடைய எதிரொலிப்பு எத்தகையதாக இருந்தது?

பதில்: அதை மிகவும் வரவேற்பவர் போலத் தோன்றினார்.

''நானும் சமாதானத்தை விரும்புகிறேன்; சகலரும் ஜனநாயகப் பாதையில் சேர்வதை விரும்புகிறேன். இனை அக்கறையுடன் பரிசீலிப்பேன்'' என்று அவர் கூறினார்.

இதற்கிடையில் பி. பி. சி சிங்களச் சேவைக்கு ஆரியரத்தினா நேற்று பேட்டி அளிக்கையில், புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் தாம் இணைப்பாளராகக் கடமை ஆற்றத் தயார் என்று தெரிவித்திருந்தார்.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு சமாதானச் சூழ்நிலை அவசியம். அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு போர் நிறுத்தமும் பொருளாதாரத் தடை நீக்கமும் பிரதானமானவை. அவற்றை அரசு செய்யுமானால் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயார் என்று — விடுதலைப் புலிகள் கொழும்பில் இருந்து சென்றவர்களிடம் தெளிவு படுத்தியிருந்தனர். (அ-க-5-5)

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதர் ஆறுமுகம் கயிலாயபிள்ளை
(காரைநகர் தங்கோடை)

ஆறுமுகம் கயிலாயபிள்ளை 03.02.94 அன்று காரைநகர் தங்கோடையில் காலமானார்.
இவர் காலஞ் சென்ற இராமநாதர் ஆறுமுகம், சின்னக்குட்டியின் மகனும், மாணிக்கத்தின் அருமைக் கணவரும், காலஞ் சென்ற சிறாப்பர் கந்தையாவின் தம்பியும், கோவிந்தபிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தமையனாரும், காலஞ் சென்ற தெய்வானைப்பிள்ளை அன்னபூரணத்தின் மைத்துனருமாவார்.
அன்னாரின் ஈமக்கிரிகைகள் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்
இ. ஆ. கோவிந்தபிள்ளை
[தம்பி]

71 செட்டித்தெரு,
நல்லூர்.

(29423)

## திருமதி மார்க்கண்டு தவமணி

காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு தவமணி 10.02.94 இல் காரைநகரில் காலமானார்.
இவர் அ. வ. மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற தம்பையா, சுந்தரம்மாவின் அன்பு மகளும், பவானி நித்தியரூபி, மதனரூபிராசன் [கொழும்பு], கமலரூபிராசன் [லண்டன்], சுபாஜினி, சந்திராதேவி, காலஞ் சென்ற சோதிலிங்கம், இந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், விசுவலிங்கம் [பிள்ளையார் றேட்ஸ் கிளிநொச்சி], மயில்வாகனம், கனகபாலன், பவானந்தன் [S. K. K. வவுனியா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் ஈமைக்கிரியைகள் 11 02 94 இல் காரைநகரில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி அறியத்தருகிறோம்.

தகவல்
வி, பவானி
(மகள்)

79/2 பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(29424)

## திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை (ஆசிரியர், கோண்டாவில் இந்து ம. வி) காலமானார்.

அன்னார் ஆறுமுகம் செல்லத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், சிவக்கொழுந்து நாகரத்தினம் தம்பதிகளின் மகளும், செல்வரஞ்சன் (ஜேர்மனி), சுதாகரன் (பௌதீக விஞ்ஞான பீட 2 ஆம் வருட மாணவன்), சுதர்சன் (மானிப்பாய் இந்து. A/L 93 மாணவன்) ஆகியோரின் தாயாரும், மஞ்சுளா, தர்சினி ஆகியோரின் பெரியம்மாவும், புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராசேஸ்வரன், ஜெகதீஸ்வரன், புவனேஸ்வரன் (பொது முகாமையாளர் கரைச்சி தெ. ப. ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி), சந்திரேஸ்வரன், மகேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் மேற்கு இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (13-2-94) முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
செ. சுதாகரன்,
(மகன்)

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு.

[29418]

## திருமதி நடராஜக் குருக்கள்

இவர் காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற கொக்குவில் நடராஜக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய பரிபாலகர் ந. தியாகராஜ ஐயர், ந. மோகனராச ஐயர் ஆகியோரின் தாயாரும், அன்னபூரணேஸ்வரி, ரத்தினேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் மாமியாரும், பத்மாவதி - பாலசுப்பிரமணிய சர்மா (மலேசியா), பத்மநாதன் - லதா (நியூசிலாந்து), இராஜசேகரன் - ஜெயந்தி (பொற்பதி விநாயகர் ஆலய பூசகர்), சிறிதரன், நடராஜா (வீடியோ விவேக்கா), ஜெயலக்ஷ்மி, சுகி, ராஜ்மோகன், வாசுகி, சந்திரிகா ஆகியோரின் பேர்த்தியாரும், பிரணவன், திரியம்பதி, கௌத்திரன், நேத்ரன், பவித்ரா, மனோராஜ், கிருத்திகன், அபிராமி ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 2.00 மணியளவில் கொக்குவில் பூநாறி மரத்தடி இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
ந. தியாகராஜ ஐயர்.
(மகன்)

கொக்குவில்.

(29426)

## திருமதி ஆறுமுகம் செல்லமுத்து

யாழ்ப்பாணம் சுந்தர்மடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கைம்பெண் செல்லமுத்து காலமானார்.
இவர் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் தவமணி தேவி, சிவபாதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம் (லிங்கம் Works உரிமையாளர்) புவனராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்தி, மிதுனா, மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (13-2-94) முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. சண்முகலிங்கம்
(மருமகன்)

தி. சண்முகலிங்கம்.
7/5 1 ஆம் ஒழுங்கை.
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

(இ/7381)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org